அங்கன்வாடி கட்டடம் திறப்பு...



குமரி மாவட்டம் கருங்கல் அருகே உள்ள கப்பியறை பேரூராட்சி கஞ்சிக்குழியில் ரூ. 15 லட்சம் செலவில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி கட்டடத்தை திறந்து வைத்து குத்துவிளக்கேற்றினார் விஜய் வசந்த் எம்.பி. உடன் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள்.

ஆறுமுகனேரி கோயில்களில் வருஷாபிஷேகம்

ஆறுமுகனேரி, அக். 5: ஆறுமுகனேரி நடுத்தெரு, பிரம்மசக்தி அம்மன் கோயில், காந்தி தெரு வில் உள்ள கிழக்கத்தி முத்து சுவாமி கோயி லில் வருஷாபிஷேக விழா திங்கள்கிழமை நடைபெற்றது.



சிறப்பு அலங்காரத்தில் பிரம்மசக்தி அம்மன்.

பிரம்மசக்தி அம்மன் கோயிலில் காலை 6 மணிக்கு கணபதி ஹோமத்துடன் தொடங்கி லட்சுமி ஹோமம், நவக்கிரக ஹோமம், பூர்ணா ஹுதி, தீபாராதனை நடைபெற்றன. பின்னர் விமானக் கலசம், பிரம் மசக்தி அம்மன், பரிவார தெய்வங்களுக்கு வருஷாபிஷேகம், அலங் கார தீபாராதனை நடைபெற்றன.

கிழக்கத்திமுத்து சுவாமி கோயிலில் காலை 9 மணிக்கு முதல் பல் வேறு ஹோமங்கள், தீபாராதனை நடைபெற்றன. பின்னர் விமானக் கல சம், கிழக்கத்தி முத்துசுவாமி, நாராயணர், மும்மூர்த்தி, பட்டாணி சுவாமி, பேச்சி அம்பாள் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு வருஷாபி ஷேகம் நடைபெற்றது. பின்னர், அலங்கார தீபாராதனைகள் நடைபெற் றன. நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு வழிபட்டனர். வருஷாபிஷேகத்தை மணிகண்டன் நடத்தி வைத்தார். ஏற்பாடுகளை கோயில் நிர்வாகி த.சீ.அழகேசன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

நவராத்திரி விழா: திருச்செந்தூரில் விற்பனைக்கு வந்துள்ள கொலு பொம்மைகள்



திருச்செந்தூரில் விற்பனைக்கு வந்துள்ள கொலு பொம்மைகள்.

திருச்செந்தூர், அக். 5: நவராத்திரி விழாவையொட்டி திருச்செந்தூரில் விற்பனைக்கு வந்துள்ள கொலு பொம்மைகளை பெண்கள் ஆர்வமு டன் வாங்கிச் செல்கின்றனர்.

நவராத்திரியை முன்னிட்டு மக்கள் தங்கள் வீடுகளில் தெய்வங்கள், மனிதர்கள் மற்றும் பிற உயிரினங்களின் களிமண் பொம்மைகளை கொலு வைத்து நாள்தோறும் பூஜை செய்வது வழக்கம். கோயில்களிலும் கொலு வைக்கப்பட்டு, அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறும்.

நிகழாண்டு நவராத்திரி விழா அக். 11ஆம் தேதி தொடங்கி, 19ஆம் தேதி சரஸ்வதி பூஜை, 20ஆம் தேதி விஜயதசமியுடன் நிறைவுபெற உள்ளது. இதையொட்டி, திருச்செந்தூரில் பல்வேறு விதமான கொலு பொம்மைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றை பெண்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர்.

சுங்கான்கடை பொறியியல் கல்லூரிக்கு விருது



சிறந்த கல்லூரிக்கான விருதைப் பெற்றுக்கொண்ட தாளாளர் காட்வின் செல்வஜஸ்டஸ்.

தக்கலை, அக். 5: சுங்கான்கடை புனித சவேரியார் கத்தோலிக்க பொறி யியல் கல்லூரிக்கு ஐசிடி சார்பில், 'சிறந்த கல்லூரிக்கான விருது' வழங் கப்பட்டது.

ஐசிடி அகாதெமியின் மாநில மாநாட்டில் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியதற்காக வழங்கப்பட்ட விருதை, தாளாளர் காட்வின் செல்வஜஸ்டஸ் பெற்றுக்கொண்டார். சிறந்த செயலாக்கத்துக்காக கல்லூரி முதல்வர் மகேஸ்வரனுக்கு 'சிறந்த கல்லூரி முதல்வர் விருது', சிறப்பான ஒருங்கிணைப்புக்காக கல்லூரி புல முதல்வர் ஆன்றோ குமாருக்கு 'சிறந்த ஒருங்கிணைப்பாளர்' விருது வழங்கப்பட்டது.

இம்மாநாட்டில் மாணவர்களின் வடிவமைப்பு சிந்தனை, புதுமை, தயாரிப்பு மேம்பாடு போன்ற தொழில்நுட்பப் பயிற்சிகளை வளர்க் கும் நோக்கில், 'ஐசிடி அகாதெமியின் ஆட்டோடெஸ்க் இன்னோவே ஷன் மையம்', வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தும் திறன் வளர்ப்பு மையம் இக்கல்லூரியில் தொடங்கப்பட்டது. விருது பெற்ற முதல் வர், பேராசிரியர்களை தாளாளர், நிதி நிர்வாகி ரஞ்சித், துணை முதல் வர் கிறிஸ்டஸ் ஜெயசிங், மக்கள் தொடர்பு அலுவலர் ஜஸ்டின் திரவி யம், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் பாராட்டினர்.

விவசாய நிலங்கள் வழியே உயர் மின் கோபுரங்கள்: ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் முற்றுகை

தூத்துக்குடி, அக். 5: விவசாய நிலங் கள் வழியே உயர் மின் கோபுரங் கள் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரி வித்து, எட்டயபுரம் பகுதி விவசாயி கள் ஆட்சியர் அலுவலகத்தை முற் றுகையிட்டனர்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர் கூட்டத்தில், ஏராளமான பொது மக்கள் கலந்துகொண்டு புகார் மனுக்கள் அளித்தனர்.

இதனிடையே, எட்டயபுரம் முதல் விருதுநகர் வரை சுமார் 400 மெகாவாட் மின்சாரத்தைக் கொண்டு செல்லும் வகையில், விவ சாய நிலங்கள் வழியாக உயர் மின் கோபுரங்கள் அமைக்கும் பணிக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அப்பகுதி விவசாயிகள் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்று கையிட்டனர்.

பின்னர், விளைநிலங்களில் இல் லாமல், மாற்று வழித்தடத்தில் மின் கோபுரங்கள் அமைக்க நடவ டிக்கை எடுக்க வேண்டும் என ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.

பொட்டலூரணியைச் சேர்ந்த சங்கரநாராயணன் தலைமையில் அப்பகுதி மக்கள் அளித்த மனு:

செக்காரக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் பொட்டலூரணி மற் றும் சுற்றுவட்டாரப் பகுதி விவசா யிகள் புதிய உறுப்பினர்களாகச் சேருவதற்கு விண்ணப்பம் கேட்டு, கடந்த 5 ஆண்டுகளாக முறையிட் டபோதும் விண்ணப்பங்களை வழங்க மறுத்து வருகின்றனர். மேலும், விவசாயிகளுக்கான இடு பொருள்களை முறையாக வழங்கா மல் வியாபாரிகளுக்குக் கைமாற்றி விடுகின்றனர். விவசாயக் கடன் ஒதுக்கீட்டிலும் நிதியை உறுப்பி னர்களுக்கு சரியாகப் பகிர்ந்து வழங்காமல் குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் வழங்குகின்றனர். இதுகு றித்து, உரிய விசாரணை நடத்த வேண்டும் என மனுவில் தெரிவிக்



மனு அளிக்க வந்த பொட்டலூரணி கிராம மக்கள்.

கப்பட்டுள்ளது.

வர்த்தகரெட்டிபட்டி கிராம மக் கள் அளித்த மனு:

தேவேந்திரகுல வேளாளர் சமூ கத்தைச் சேர்ந்த 100-க்கும் மேற் பட்ட குடும்பங்கள் சுமார் 120 ஆண்டுகளுக்கும் மேலாக இப்பகு தியில் வசித்து வருகின்றனர். மயான பயன்பாட்டுக்காக அரசு சார்பில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுற் றுச்சுவர் மற்றும் எரிமேடை உள் ளிட்ட வசதிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இருப்பினும், மயானத்துக்குச் செல்வதற்கு முறை யான சாலை வசதி இல்லை. எனவே, மயானத்துக்குச் செல்லும் பாதையில் தார்ச் சாலை அமைத் துத் தர வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வல்லநாடு அகரம் கிராம மக்கள் சார்பில் சந்தனராஜா அளித்துள்ள மனு: வல்லநாடு தாமிரவருணி ஆற் றங்கரையில் அமைந்துள்ள சுடலை யாண்டவர் கோயிலை அகரம் மற் றும் சுற்றுவட்டாரப் பகுதி மக்கள் சுமார் 200 ஆண்டுகளுக்கும் மேலா கத் தங்களின் குலதெய்வமாக வழி பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தூத்துக்குடி மாந கராட்சி உதவிப் பொறியாளர் ஏ.இ. லெனின், நான் நினைத்தால் கோயிலை அகற்றுவேன் எனக் கூறி பக்தர்களின் மத உணர்வுகளைப் புண்படுத்தியுள்ளார். அவர் மீது துறைரீதியான விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளையரசனேந்தல் பகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி கடல் பாண்டி, தனக்கு இலவச வீட்டுமனைப் பட்டா கோரி, தனது 7ஆம் வகுப்பு படிக்கும் மகன் வசந்துடன் வந்து, ஆட்சியர் அலுவலகம் முன் தர்னாவில் ஈடுபட்டார். பின்னர், போலீஸார் சமரசம் செய்ததைத் தொடர்ந்து, ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்தார்.

குமரி, தூத்துக்குடியில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம்





மூதாட்டியிடம் மனுவைப் பெற்றுக்கொண்டு குறைகளைக் கேட்டறிந்த கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் மு. பிரதாப். (வலது) பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்ற தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன்.

நாகர்கோவில்/ தூத்துக்குடி, அக். 5: நாகர்கோவிலில் உள்ள, கன்னியா குமரி மாவட்ட ஆட்சியர் அலு வலகத்தில் திங்கள்கிழமை நடை பெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில், 7 பேருக்கு புற்றுநோயாளிகளுக் கான மாதாந்திர உதவித் தொகைக் கான ஆணைகளை ஆட்சியர் மு. பி ரதாப் வழங்கினார்.

கூட்டத்துக்கு ஆட்சியர் தலைமை வகித்து, உதவித்தொகை கள், பட்டா பெயர் மாற்றம், அடிப் படை வசதிகள் உள்ளிட்ட பல் வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்கள் அளித்த 393 மனுக்க ளைப் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து, முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 7 பேருக்கு புற்றுநோயாளிகளுக்கான மாதாந்திர உதவித் தொகைக்கான ஆணைகளை ஆட்சியர் வழங்கி னார். குழந்தைகள் நலன், சிறப்புச் சேவைகள் துறையின்கீழ் செயல்ப டும் மாவட்டக் குழந்தைகள் பாது காப்பு அலகில் காலியாக இருந்த பாதுகாவலர் பணியிடத்துக்கு தினக்கூலி அடிப்படையில், திருநம்பி பெனிஷ் மைக்கேல் என்ப வருக்கு பணி நியமன ஆணை வழங் கப்பட்டது.

முன்னதாக நடைபெற்ற மாற்றுத் திறனாளிகள் சிறப்பு குறைதீர் கூட்டத்திலும் ஆட்சியர் மனுக்க ளைப் பெற்றுக்கொண்டார்.

மாவட்ட வருவாய் அலுவலர் மு. வேலுமணி, சமூகப் பாதுகாப் புத் திட்ட தனித்துணை ஆட்சியர் சரவணன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) பத்மபிரியா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ரஞ்சித்குமார், மாவட்ட சமூக நல அலுவலர் காயத்ரி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் செந்தூர்ராஜன், உத விஆணையர் (கலால்) ஈஸ்வரநா தன், அலுவலர்கள் பங்கேற்றனர்.

தூத்துக்குடியில்...: தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத் தில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம், ஆட்சியர் விஷு மகாஜன் தலைமையில் திங்கள்கிழமை நடை பெற்றது.

முகாமில் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்கள் 445 மனுக் களை ஆட்சியரிடம் அளித்தனர். மேலும், மூத்த குடிமக்களிடமிருந்து 30 மனுக்கள், மாற்றுத்திறனாளிகளிட மிருந்து 35 மனுக்கள் என மொத்தம் 510 மனுக்கள் பெறப்பட்டன.

முன்னதாக, மாவட்ட தொழில் மையம் சார்பில் தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட் டுத் திட்டத்தின்கீழ், திருநர் கி. சுஜி தாவுக்கு ரூ. 3.62 லட்சம் மதிப்பி லான பயணியர் ஆட்டோவை வழங்கினார்.

மாவட்ட வருவாய் அலுவலர் மு. குருச்சந்திரன், தனித் துணை ஆட்சியர் பிர்தௌஸ் பாத்திமா, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ஸ்வர்ணலதா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சாந்தி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் காமாட்சி உள்ளிட் டோர் கலந்து கொண்டனர்.

மாநில ஹேக்கத்தான் போட்டி: ரோகிணி பொறியியல் கல்லூரி சிறப்பிடம்



சிறப்பிடம் பெற்ற மாணவர், மாணவிகள்.

கன்னியாகுமரி, அக். 5: தமிழக அரசு சார்பில் 'நிமிர்ந்து நில்' என்ற தலைப்பில் நடத்தப்பட்ட மாநில அளவிலான ஹேக்கத் தான் போட்டியில், கன்னியா குமரி மாவட்டம், பால்குளம், ரோகிணி பொறியியல் கல்லூரி மாணவர்கள் சிறப்பிடம் பெற்ற னர்.

இப்போட்டியில் ரோகிணி கல்லூரியில் இருந்து 100-க்கும் மேற்பட்ட மாணவர், மாணவி கள் பங்கேற்றனர். அதில் முதல் மற்றும் 2ஆம் கட்டத் தேர்வுக ளில் வெற்றி பெற்று, மண்டல அளவிலான போட்டியில் 4 அணிகள் வென்று மாநில அள விலான இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

இறுதிப் போட்டியில் எலக்ட் ரானிக்ஸ் மற்றும் கம்யூனிகே ஷன் என்ஜினியரிங் துறையின் 3ஆம் ஆண்டு மாணவர் அல் ரின் ஜஸ்வா, மாணவிகள் எமிமா ரோஸ், ஆஷிகா, ஏஞ்ச லின் ஸ்வீட்டி ஆகியோர் அடங் கிய அணி மாநில அளவில் 2ஆம் பரிசு பெற்று, ரூ. 50,000 ரொக் கப் பரிசை வென்றது.

கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையின் 3ஆம் ஆண்டு மாணவிகள் வர்ஷா, சோனியா ஆகியோர் அடங்கிய அணி 4ஆம் பரிசு பெற்று, ரூ. 10,000 ரொக்கப் பரிசை வென் றது. வெற்றி பெற்ற மாணவர் களை கல்லூரித் தலைவர் கே. நீல மார்த்தாண்டன், துணைத் தலை வர் நீல விஷ்ணு, நிர்வாக இயக்கு நர் வி.எம். பிளெஸ்ஸி ஜியோ, கல்லூரி முதல்வர் ராஜேஷ் உள் ளிட்டோர் பாராட்டினர்.

நகர பசுமையாக்கும் திட்டம்: நாகர்கோவிலில் மரக்கன்றுகள் நடும் பணி தொடக்கம்



நாகர்கோவில் சுங்கான்கடை பகுதியில் மரக்கன்று நடுகிறார் மாநகராட்சி ஆணையர் ஆர். ஐஸ்வர்யா.

நாகர்கோவில், அக். 5: நகர பசுமையாக்கும் திட்டத்தின் கீழ் மரக் கன்றுகள் நடும் பணியை மாநகராட்சி ஆணையர் ஆர். ஐஸ் வர்யா திங்கள்கிழமை தொடங்கி வைத்தார்.

நகர பசுமையாக்கும் திட்டத்தின் கீழ், நாகர்கோவில் மாநக ரப் பகுதிகளில் உள்ள பூங்காக்கள், சாலையோரங்கள் மற்றும் அரசுப் பள்ளி வளாகங்களில் மாநகராட்சி சார்பில் பல்வேறு வகையான மரக்கன்றுகள் நடப்பட்டு, தொடர்ந்து பராமரிக் கப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, நாகர்கோவில் மாநகரின் நுழைவு வாயிலான சுங்கான்கடை பகுதியில் சாலையோரங்களில் மரக் கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், மாநகராட்சி ஆணையர் கலந்து கொண்டு, மரக்கன்றுகளை நட்டார்.

நாகர்கோவில் மாநகரை பசுமையான, தூய்மையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மாநகரமாக மாற்றும் வகையில், இது போன்ற பசுமை வளர்ப்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள் ளப்படும் என்று ஆணையர் தெரிவித்தார்.

தூத்துக்குடியில் காய்கனி விலை உயர்வு

தூத்துக்குடி, அக். 5: தூத்துக்குடி சந்தை யில் காய்கனிகளின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.

தூத்துக்குடி காய்கனி சந்தைக்கு திரு நெல்வேலி, மதுரை, ஒட்டன்சத்திரம் உள் ளிட்ட பகுதிகளிலிருந்து காய்கனிகள் வரத்து உள்ளது. தற்போது வெயிலின் தாக்கம் காரணமாக வரத்து குறைந்துள் ளது. இதனால், பட்டாணி கிலோ ரூ.300, பட்டர் பீன்ஸ் ரூ.180, பீன்ஸ் ரூ.140, அவ ரைக்காய் ரூ.120, கொத்தமல்லி ரூ.100, இஞ்சி ரூ.180 வரை விற்பனையாகிறது. சின்ன வெங்காயம் ரூ.80 முதல் ரூ.100 வ ரையும், பல்லாரி ரூ.80, கத்தரிக்காய் ரூ.80 வரையும் விற்பனையாகிறது.

கடந்த சில நாள்களுக்கு முன்பு கிலோ ரூ.30-க்கு விற்பனையான தக்காளி, தற் போது ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனை செய்யப்படுகிறது. பெரும்பாலான காய்க னிகளின் விலை கிலோவுக்கு ரூ.20 முதல் ரூ.40 வரை உயர்ந்துள்ளது. பட்டாணி, பீன்ஸ் உள்ளிட்ட ஆங்கில காய்கனிக ளின் விலை ரூ.100 முதல் ரூ.150 வரை அதிகரித்துள்ளது. இந்த விலை உயர் வால் பொதுமக்கள் கடுமையாக பாதிக் கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து வியாபாரிகள் கூறுகை யில், வெயிலின் தாக்கத்தால் காய்கனிக ளின் வரத்து குறைந்துள்ளதுடன், புரட் டாசி விரதம் மற்றும் முத்தாரம்மன் கோயில் திருவிழாவையொட்டி பக்தர் கள் அதிகளவில் காய்கனிகளை வாங்கிச் செல்வதால் விலை உயர்ந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

நாலுமாவடியில் இலவச கபடி பயிற்சி நிறைவு



மாணவிகளுக்கு சீருடை மற்றும் சான்றிதழ்கள் வழங்கிய இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களின் நிறுவனர் மோகன் சி. லாசரஸ்.

சாத்தான்குளம், அக். 5: நாலுமா வடி, இயேசு விடுவிக்கிறார் ரெட மர்ஸ் கிளப் சார்பில் இயேசு விடு விக்கிறார் ஏலிம் கார்டன் வளா கத்தில் 8 நாள்கள் நடைபெற்ற பள்ளி, கல்லூரி மாணவிகளுக் கான 3ஆம் ஆண்டு இலவச கபடி பயிற்சி முகாம் நிறைவு பெற்றது.

இயேசு விடுவிக்கிறார் தகவல் தொழில்நுட்பத் துறை தலைவர் கிளிமெண்ட் எபனேசர் தலைமை வகித்து, பயிற்சியைத் தொடங்கி வைத்தார். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 83 மாணவி கள் பயிற்சியில் பங்கேற்றனர். தமிழ கத்தின் சிறந்த பயிற்சியாளர்களான கண்ணன், பிரபாகர், டேவிட், மணி, அசோக், தினேஷ், சிவா ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

பயிற்சி முகாமின் நிறைவு நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது. இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களின் நிறுவனர் மோகன் சி. லாசரஸ் தலைமை வகித்து, வீராங்கனைகளுக்கு சீருடை மற் றும் சான்றிதழ்களை வழங்கினார். கடலூர் சுங்கத் துறை உதவி ஆணை யாளர் (ஜிஎஸ்டி) ஆண்ட்ரூ சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

ஏற்பாடுகளை மோகன் சி. லாச ரஸ் தலைமையில், ஊழிய நிறு வன பொது மேலாளர் செல்வக்கு மார், விளையாட்டுத் துறை ஒருங் கிணைப்பாளர்கள் மணத்தி எட்வின் சாம்ராஜ், கணேசன், மக் கள் தொடர்பு அலுவலர் சாந்தகு மார், ஜெபக்குழுவினர் செய்திருந் தனர்.

பாங்க் ஆஃப் பரோடா
பேங்க் ஆப் பரோடா
Bank of Baroda
India's International Bank
119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

பேங்க் ஆப் பரோடா

கிளை : ROSARB (பிராந்திய ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை) : லோட்டஸ் சென்டர், 3வது தளம், எண்.4312/13D, VP ரத்தினசாமி ரோடு, மதுரை – 625 014, போன் : 0452 – 2602200, மின்னஞ்சல் : sarmdr@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை –IV-A (கான்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் நொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)-ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி **"எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே"** மற்றும் **"பொறுப்பேற்காத நிலையில்"** எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தார்(கள்) / அடமானதார்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தார்கள் / உத்தரவாதம் அளித்தவர்கள் /அடமானதார்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் விரிவான விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் (உரிமையாளர் / அடமானதாரர் பெயர்)	சொத்து நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொன்றிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
1. M/s. சிவசக்தி இண்டஸ்ட்ரீஸ் (கடன்தார்), பிரதிநிதியாக அதன் உரிமையாளர், திரு. P. திருநீலன், எண்.2/220C, மேலகிருஷ்ணன் புதூர், பள்ளம், நாகர்கோயில் – 629601. **2. திரு. P.திருநீலன் (அடமானதாரர்),** த/பெ திரு. பால் நாடார், எண்.2/220C, மேலகிருஷ்ணன் புதூர், பள்ளம், நாகர்கோயில் – 629601. **3. திருமதி. T. சரஸ்வதி (உத்தரவாதமளித்தவர்),** க/பெ. திரு. P.திருநீலன், எண்.2/220C, மேலகிருஷ்ணன் புதூர், பள்ளம், நாகர்கோயில் – 629601. **மேலும்** **4. M/s. JAL FLO இண்டஸ்ட்ரீஸ் (கடன்தார்),** பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள், எண்.2/220A, மேலகிருஷ்ணன் புதூர், பள்ளம், நாகர்கோயில் – 629601. **5. திரு. P.திருநீலன் (உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்),** த/பெ. திரு. பால் நாடார், பங்குதாரர் : M/s. JAL FLO இண்டஸ்ட்ரீஸ், எண்.2/220A, மேலகிருஷ்ணன் புதூர், பள்ளம், நாகர்கோயில் – 629601. **6. திருமதி. T. சரஸ்வதி (உத்தரவாதமளித்தவர்),** க/பெ. திரு. P.திருநீலன், பங்குதாரர் : M/s. JAL FLO இண்டஸ்ட்ரீஸ், எண்.2/220A, மேலகிருஷ்ணன் புதூர், பள்ளம், நாகர்கோயில் – 629601.	**இனம்–1 :** கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தாலுகா, மதுசூதனபுரம் கிராமம், சர்வே எண்.905/1, இதிலடங்கியதும் அதன் பகுதியுமான 30 சென்ட் குடியிருப்பு நிலம் மற்றும் கட்டிடத்தின் எல்லைகள் விபரம் : கிழக்கு – காலி நிலம், தெற்கு – ரோடு, மேற்கு – விநாயகர் காலனி, வடக்கு – திரு. P. திருநீலனின் சொத்து. **இனம்–2 :** கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தாலுகா, மதுசூதனபுரம் கிராமம், சர்வே எண்.905/1 மற்றும் சர்வே எண்.884/3 இதிலடங்கியதும் அதன் பகுதியுமான முறையே 20 சென்ட் மற்றும் 1.313 சென்ட் என 21.313 சென்ட் காலி நிலத்தின் எல்லைகள் விபரம் : கிழக்கு – விமலா மற்றும் செல்வமணியின் சொத்து, தெற்கு – திரு. P. திருநீலனின் சொத்து, மேற்கு – விநாயகர் காலனி, வடக்கு – ரோடு. இச்சொத்து திரு. பால் நாடார் மகன் திரு. P. திருநீலன் பெயரில் உள்ளது. **வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் (ஏதேனுமிருப்பின்) : OS 228/08 ன்படி நாகர்கோயில், முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள நீதிமன்ற அட்டாச்மெண்ட். GPS ஒருங்கிணைப்புகள் (இருப்பிடக் குறிப்பிற்காக)** **அட்சரேகை : 8.109015 மற்றும் தீர்க்கரேகை : 77.431777 Property ID in BAANKNET Portal: BARB6028202600008**	M/s. சிவசக்தி இண்ட்ஸ்ட்ரீஸ் நிலுவை : ரூ.45,69,579/– M/s. Jal Flo இண்ட்ஸ்ட்ரீஸ் நிலுவை: ரூ.77,87,309/– **மொத்த நிலுவை : ரூ.1,23,56,888/– (ரூபாய் ஒரு கோடியே இருபத்து மூன்று லட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து எண்ணூற்று எண்பத்து எட்டு மட்டும்) 05.10.2026 தேதியன்று,** மற்றும் பொருந்தும் வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன், தொகை முழுமையாகச் செலுத்தும் தேதி வரை.	**10.11.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**	**1. ரூ.61,97,000/–** (ரூபாய் அறுபத்து ஒரு லட்சத்து தொண்ணூற்று எழாயிரம் மட்டும்) **2. ரூ.6,19,700/–** (ரூபாய் ஆறு லட்சத்துப் பத்தொன்பதாயிரத்து எழுநூறு மட்டும்) **3. ரூ.50,000/–** (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)	**ஆக்கபூர்வ (Constructive) சவாதீனம்**	**09.11.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு **https://bankofbaroda.bank.in/e-auction** மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் **https://baanknet.com** இணையதளங்களில் லிங்க்-ல் பார்வையிடலாம். மேலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை போன் : **0452–2602200, மொபைல் என்.9790247824** என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 05.10.2026 / இடம் : மதுரை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா

epaper.dinamani.com